# இருகிராமங்களில் 50 பெண்கள் சுட்டுக்கொலை

(மணிலா)

கிழக்கு மாகாணங்களில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பித்ததன் விளைவாகப் பெருந்தொகையான அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இரு கிராமங்களில் வீதியோரமாக சுமார் ஐம்பது தமிழ்ப்பெண்களின் உடல்கள் துப்பாக்கிக் குண்டுகளால் துளைவிடப்பட்ட நிலையில் அனாதரவாகக் கிடந்ததாக ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இவ்வாரம் கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போதே இப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வேளையில் இப்பகுதியில் அவசரகாலச் சட்டம் சிறிலங்கா அரசால் பிறப்பிக்கப்பட்டிருந்ததை குறிப்பிடத்தக்கது.


Registered as a News Paper in Sri Lanka   பக்கங்கள் 04   விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   மக்கள் தினசரி   PEOPLES DAILY


## போதைக்காக சுருட்டில போமலின் கலப்பு

(நெல்லியடி)

போதைப் பொருள்களுக்கு தடைவிதிக்கப்பட்டதனாலும் குடிவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால், தற்போது யாழ் குடாநாட்டில் விற்பனை செய்யப்பட்டுவரும் ஒருவகை சேலம் சுருட்டுக்களில் சோடாவுடன் சேர்த்து போமலின் கலப்படம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிய வருகிறது. தற்போது மதுப்பிரியர்கள் மத்தியில் இந்தச் சுருட்டு பிரபல்யம் அடைந்து வருகிறது. (ச)


நாதம் 01   மார்கழி   (25-12-1990)   செவ்வாய்க்கிழமை   ஓசை 300


# கிழக்கில் இரு சம்பவங்களில்

# 33 படையினர் பலி; பலர் காயம்

## பாரிய கவச வாகனம் சேதம்-பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

கிழக்கில் நடைபெற்ற இருவேறு சம்பவங்களில் முப்பத்து மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும், பாரிய கவசவாகனம் ஒன்று முற்றாகச் சேதமடைந்ததாகவும் கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடந்த மோதல் சம்பவமொன்றில் 14 இராணுவத்தினர் உயிரிழந்ததுடன் பலர் காயம் அடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த 14 இராணுவத்தினரில் அதிகாரிகளும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராளிகளை தேடும் நடவடிக்கையில் இராணுவம் ஈடு


(4 ஆம் பக்கம் பார்க்க)


## காவலரண் அமைக்கும்போது குண்டுவெடித்துப் பலபடை பலி

(ஆனையிறவு)

சிறிலங்கா இராணுவத்தின் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் காவலரண் அமைத்துக் கொண்டிருந்தபோது அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் ஆனை


(4ஆம் பக்கம் பார்க்க)


## அனுராதபுரம்மாவட்டம் மருதமடுவில்

# இராணுவம் மீது புலிகள் தாக்குதல்; 6 படை பலி; லெப். சசி வீரமரணம்

(மன்னார்)

நொச்சியாகமவில் இருந்து மருதமடு இராணுவ முகாமிற்கு வாகனங்களில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர், பவல் வாகனங்கள் சேதமடைந்தன. இவற்றில் வந்த ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

## மாவிட்டபுரத்தில் மோதல் 4 புலிகள் வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்திற்கெதிராக விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் பலத்த சேதத்துடன் இராணுவம் பின்வாங்கியுள்ளது. விடுதலைப்புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.


(4ஆம் பக்கம் பார்க்க)


## குப்பிளானில் மோதல்

# 33 படையினர் பலி; பலர் காயம்

## பாரிய கவச வாகனம் சேதம்-பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

கிழக்கில் நடைபெற்ற இருவேறு சம்பவங்களில் முப்பத்து மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும், பாரிய கனரக வாகனம் ஒன்று முற்றாகச் சேதமடைந்ததாகவும் கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடந்த மோதல் சம்பவமொன்றில் 14 இராணுவத்தினர் உயிரிழந்ததுடன் பலர் காயம் அடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த 14 இராணுவத்தினரில் அதிகாரிகளும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராளிகளை தேடும் நடவடிக்கையில் இராணுவம் ஈடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

அனுராதபுரம்மாவட்டம் மருதமடுவில்

## இராணுவம் மீது புலிகள் தாக்குதல்; 6 படை பலி; லெப். சசி வீரமரணம்

(மன்னார்)

நொச்சியாகமவில் இருந்து மருதமடு இராணுவ முகாமிற்கு வாகனங்களில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் ட்றக், பவல் வாகனங்கள் சேதமடைந்தன. இவற்றில் வந்த ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் லெப். சசி (சேந்தன்குளம்) என்பவர் வீரமரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; கடந்த வெள்ளிக்கிழமை மருதமடு இராணுவ முகாமில் இருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைகளால் ரூ.950 கோடி அரசுக்கு நட்டம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள், ஜனதா விமுக்திப் பெரமுன ஆகியவைகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும், அரசாங்க உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்களையும் சேர்த்து மொத்தம் ரூபா 950 கோடி அரசாங்கத்திற்குச் செலவாகியுள்ளது. இந்தத் தகவலைக் கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் ராஜாங்க அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாரிஸில் கூடிய உதவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி 17 படை காயத்துடன் கொழும்புக்கு வருகின்றது

- பெனி ரவி ஜெயவர்த்தனா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையிலான போரில் காயப்படும் இராணுவத்தின

(4 ஆம் பக்கம் பார்க்க)

காயமடைந்தோரை கைதுசெய்வதன் மூலம்

## தமிழ் மக்களையும் புலிகளையும் தமிழக அரசு அவமானப்படுத்துகிறது

- யோகி

(சுன்னாகம்)

தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்திலே இதுவரை எத்தனையோ விதமான நம்பிக்கைத் துரோகங்களை விடுதலைப் புலிகள் சந்தித்திருக்கின்றார்கள். சிறிலங்கா இராணுவத்துடனான மோதல்களிலே ஊனமுற்று காயமடைந்து சிகிச்சைக்காக இந்தியா சென்ற விடுதலைப் புலிகளை தமிழ்நாடு அரசு கைது செய்வதன் மூலம் விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப் புலிகளையும், மக்களையும் அவமானப்படுத்தி வருகிறது.

எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழிவகுத்த போராளிகள் வரிசையில இவர்களும் விடுதலைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதி திரட்டுவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக்கு இரண்டு பவுணும் மேலதிகமாகவும் பங்களிக்க ஒப்புதல் அளித்த நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், சங்கானை, தெல்லிப்பளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண் அமைக்கும்போது குண்டுவெடித்துப் பலபடை பலி

(ஆனையிறவு)

சிறிலங்கா இராணுவத்தின் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் காவலரண் அமைத்துக் கொண்டிருந்தபோது அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் ஆனை

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரத்தில் மோதல் 4 புலிகள் வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் இராணுவ மினிமுகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்திற்கெதிராக விடுதலைப்புலிகள் தாக்குதல்மேற்கொண்டதில் பலத்த சேதத்துடன் இராணுவம் பின்வாங்கியுள்ளது. விடுதலைப்புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## குப்பிளானில் மோதல் "ஜீவா" வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளானில் இருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்தரப்பில் பலத்தசேதமேற்பட்டது. புலிகள் தரப்பில் பெண் போராளி ஜீவா வீரமரணமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை பதினொரு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கு பிரச்சினைக்கு தமிழக அரசே பொறுப்பு

- ஈ. என். டி. எல். எவ் குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கையில் வட-கிழக்கில் ஏற்பட்டிருக்கும் அமைதியின்மைக்கும் பதினான்கு இலட்சம் பேர் அகதிகளாகி, பல கோடி ரூபா பெறுமதியான உடைமைகள் இழந்த நிலைக்கும் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இறந்தமைக்கும் தமிழக அரசும முதலமைச்சருமே பொறுப்பேற்க வேண்டும் என ஈ. என். டி. எல். எவ். குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் போராளிகள் கைது செய்யப்பட்டது தொடர்பாக ஈ. என். டி. எல். எவ். விட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் சுட்டுக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப்பொதுமகன் ஒருவர் சிறிலங்கா ஊர்காவற் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் உள்ள விநாயகபுரம் என்ற இடத்தைச் சேர்ந்த தவம் என்பவரையே ஊர்காவற் படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர். (மு)

## வீரமரணம் நளினி

(யாழ்ப்பாணம்)

கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் கடந்த சனிக்கிழமையன்று காயமடைந்திருந்த பெண்போராளி நளினி காந்தி (பண்டிதராதன் கவிதா, கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு) என்பவர் நேற்றுக்காலை ஆறு மணிக்கு வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (மு)

## வரி விளம்பரம்

### ரதிவோச் வேக்ஸ்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்:- எமது ஸ்தாபனம் இல. 44, 46, கஸ்தூரியார் வீதியில் மீண்டும் 1-12-90 முதல் இயங்கி வருகின்றது தவிர, இல. 12, பென்னையா லேன், ஆரூராம்மடம் ஆனைக்கோட்டையிலும் தொடர்ந்தும் இயங்கிவரும் என்பதையும் எமது வாடிக்கையாளருக்கும், சகல மணிக்கூடு பாவனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் (50 வருடகால நம்பிக்கைச் சின்னம் ரதி வோச் வேக்ஸ்) - நிர்வாகம்.

(B-1648

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மன்டோனா ரேடர்" இல. 356A பருத்தித்துறை வீதி, நல்லூர். "அர்ஜுனவிலாசம்" 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R-888)

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள் அனைத்தும் விற்பனையாகிக்கொண்டு இருக்கின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். உங்கள் தெரிவுக்குமுந்துங்கள்; அனைத்தும் புதிய டிசைன்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம், நல்லூர், யாழ்ப்பாணம்.

(B-1718)

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழிச்சிறகு, பித்தளை, செம்பு போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா, Second Hand Book House 57 ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் லேன் யாழ்ப்பாணம். (B - 1761)

### 'அக்கினி'

மீரா வெளியீடு மண்மீட்பு, சமூகமீட்பு குரல்கள் ஓங்கி ஒலிக்கும் இக்காலகட்டத்தில் மலரும் புரட்சிப் படைப்பு செங்கை ஆழியானின் 'அக்கினி' (148, பக்கங்கள்) 02-01-1991 இல் சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (R - 966)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

## பதவி வெற்றிடங்கள்

1. நிர்வாக அலுவலர் (Administrative Assistant)

வயது: 30 - 45; தகைமை: க.பொ.த. (உ.த.) சித்தி அனுபவம்: குறைந்தது 05 வருடம் - நிர்வாக திறன், தகவல் பரிமாறல், கணக்கியல், அலுவலக ஒருங்கிணைப்பு, முகாமை, தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி.

2. லிகிதர் / தட்டெழுத்தாளர் (Clerk Cum Typist)

வயது: 25 - 35: தகைமை: க. பொ. த. (சா. த.) சித்தி: அனுபவம்: குறைந்தது 03 வருட அலுவலக வேலை. தமிழ் / ஆங்கில தட்டெழுத்து / சுருக்கெழுத்து, கணக்கியல்.

3. அலுவலக உதவியாளர் (Office - Asst.)

வயது: 25 - 45; தகைமை: க. பொ. த. (சா. த.) சித்தி. அனுபவம்: குறைந்தது 03 வருட அலுவலக வேலை.

குறிப்பு: சேவை மனப்பான்மையும், பொதுசன தொடர்பும், சமூக தொண்டர் ஸ்தாபன அனுபவமுடையவர்களுக்கு முன்கணிப்பு வழங்கப்படும்.

மேற்கூறிய பதவிகளுக்கு விண்ணப்பகாரர்கள் தத்தம் விண்ணப்பங்களுடனும், உரிய சான்றிதழ்களுடனும் 1990. 12. 29 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு இல. 100, சிவன் வீதி (இராசாவின் தோட்டம்) இணைய அலுவலகத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு வேண்டப்படுகின்றனர்.

பதவிக்கும், அனுபவத்திற்குமேற்ப சம்பளம் பேசி வழங்கப்படும்.

01. 01. 1991 அன்று கடமையைப் பொறுப்பேற்கக்கூடியவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கவும்.

(R-962)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### வீரவேங்கை சுது

(சதானந்தன் - நிர்மலநாத், அரியாலை)



| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 26 - 02 - 1968 | 24 - 12 - 1986 |

24-12-86 அன்று மட்டக்களப்பு ஆரையம்பதியில் ஏற்பட்ட சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த வீர வேங்கை "சுது" (சதானந்தன் நிர்மலநாத் (அரியாலை) அவர்களுக்கு எமது வீர அஞ்சலிகள்.

அரியாலை பிரதேச இளைஞர்கள்.

(B/1767)

## அனித்தா பயிற்சி நிலையம்

K. K. S றோட், பூநாறிமரத்தடி, கொக்குவில்.

ஆடைகள் தயாரிப்பு, சிகையலங்காரம், உணவு தயாரிப்பு

### 'டிப்ளோமா-ஹோம் எகனமிக்ஸ்'

ஆடை தயாரிப்பு
பத்திக் துணி வர்ண சாயமிடல்
சிகையலங்காரம்
விதவிதமான கேக் தயாரிப்பு
உணவு தயாரிப்பு
கை வேலைகள்
பூ வேலைப்பாடுகள்

ஆகியவற்றுடன்

திருமணப் பெண்களின் மேக் - அப் வகுப்புகள் மாதத்தோறும் 3 நாட்கள் நடைபெறும். விபரங்களுக்கு மேற்கூறிய விலாசத்தில் தொடர்புகொள்க.

திருமதி பவளம் சுப்பிரமணியம்

(B/1766)

## 53ஆம் நாள் நினைவாக



| தாயின் மடியில் | மண் மீட்பில் |
|---|---|
| 25- 09- 1970 | 03- 11- 1990 |

மாவிட்டபுரம் தாக்குதலில்வீரமரணமடைந்த

### வீரவேங்கை

### 2ஆம் லெப்டினன்ட் அன்றா

(நாகமுத்து திரவியநாதன்)

இவன் எதிரியின் பாசறையை எரிக்கும்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 19 - 11 - 1972 | 25 - 11 - 1990 |

கோபி இரைச்சி

வகைகள் அனைத்தும் விற பனையாகிக்கொண்டு இருக் கின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். உங்கள் தெரிவுக்குமுந்துங்கள்: அனைத்தும் புதிய டிசைன்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை மின்சார நிலைய வீதி. யாழ்ப் பாணம், நல்லூர், யாழ்ப் பாணம்.

(B-1718)

---

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழிச்இறகு, பித்தளை, செம்பு போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சௌந்திர சு, Second Hand Book House 57 ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் லேன் யாழ்ப் பாணம். (B - 1761)

---

## 'அக்கினி'

மீரா வெளியீடு மண்மீட்பு, சமூகமீட்பு குரல்கள் ஓங்கி ஒலிக்கும் இக்காலகட்டத்தில் மலரும் புரட்சிப் படைப்பு செங்கை ஆழியானின் 'அக்கினி' (148, பக்கங்கள்) 02-01-1991 இல் சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (R - 966)

---

## கோழி இறைச்சி

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு கோழி இறைச்சி விற்கப்படும். நல்லூர் பாம் சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை, நல்லூர். (R/ 964)

---

## தவறிவிட்டது

கந்தையா கதிர்காமநாதன் என்பவரின் அடையாள அட்டை இல. 530653668 V மணிபர்ஸ் உடன் நுணாவிலுக்கும் சாவகச்சேரிக்குமிடையில் (மெயின் வீதி) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோப்பாய் ரெக்ஸ், கோப்பாயில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (R.968)

---

## சில்வா வாச் வேக்ஸ்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் வழமைபோல் இயங்குகின்றது. உத்தரவாதத்துடன் திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பாவனையில் உள்ள Rolex, Omega கைக்கடிகாரங்கள் நல்ல விலைகொடுத்து வாங்கப்படும். சகலவிதமான கைக்கடிகாரங்கள் திருத்துவதில் அனுபவம் பெற்றவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவர். (R-958)

---

தோட்டம்) இணைய அலுவலகத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு வேண்டப்படுகின்றனர்.

பதவிக்கும், அனுபவத்திற்குமேற்ப சம்பளம் பேசி வழங்கப்படும்.

01. 01. 1991 அன்று கடமையைப் பொறுப்பேற்கக்கூடியவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கவும்.

(R-962)

---

# 53ஆம் நாள் நினைவாக



| தாயின் மடியில் | மண் மீட்பில் |
| --- | --- |
| 25- 09- 1970 | 03- 11- 1990 |

மாவிட்டபுரம் தாக்குதலில்வீரமரணமடைந்த

## வீரவேங்கை
## 2 ஆம் லெப்டினன்ட் அன்ரா
### (நாகமுத்து திரவியநாதன்)

இவன் எதிரியின் பாசறையை எரிக்கும் தியாகச்சுடர்!

இவன் மறைந்தவன் அல்ல மண்ணை மீட்கும் புரட்சிப் பூ!

இங்ஙனம்
பெற்றார், சகோதரர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
அன்ரா வீதி.

(B-1762)

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
## கனகரத்தினம் மஞ்சுளாதேவி

| அன்னையின் மடியில் | அரக்கர் பிடியில் |
| --- | --- |
| 1968-05-07 | 1988-12-16 |

ஈராண்டு போனாலும் ஆறுமோ எங்கள் மனம்
வெறிபிடித்த துரோகிகள் அப்பாவியான
உம்மை படுகொலை செய்து விட்டார்களே
உம் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டி நிற்கிறோம்.

உம் பிரிவால் வாடும்
நாவலடி, அம்மா, சகோதரர்கள், உற்றார்,
அல்வாய். உறவினர்கள், நண்பர்கள்.

(B/ 1768)

---

உணவு தயாரிப்பு
## 'டிப்ளோமா-ஹோம் எகனமிக்ஸ்'

ஆடை தயாரிப்பு
பத்திக் துணி வர்ண சாயமிடல்
சிகையலங்காரம்
விதவிதமான கேக் தயாரிப்பு
உணவு தயாரிப்பு
கை வேலைகள்
பூ வேலைப்பாடுகள்
ஆகியவற்றுடன்
திருமணப் பெண்களின் மேக் - அப் வகுப்புகள் மாதத்தோறும் 3 நாட்கள் நடைபெறும். விபரங்களுக்கு மேற்கூறிய விலாசத்தில் தொடர்புகொள்க.

திருமதி பவளம் சுப்பிரமணியம்

(B/1766)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம் 19 - 11 - 1972



வீரமரணம் 25 - 11 - 1990

## வீரவேங்கை லெப். மகாராஜா
### (அருணைத்துரை இந்திரன்)

(காங்கேசன்துறை நேரடி மோதலில் வீரமரணம்)

அன்பு என்னும் சோலையிலே அரும்பிவிட்ட வீரவேங்கை
அள்ளி அணைக்கும் வேளையிலே அண்ணன் வழி கண்டவனே
அந்நியர் நம் மண்ணை ஆக்கிரமிக்க வந்த வேளையிலே
அண்ணன் இட்ட அன்புக் கட்டளையை தலையாகக் கொண்டவனே
மறவர் குல மாணிக்கமே மகாராஜா தமிழீழமண் புகழ் காத்தவருள் நீயும் ஒருவனடா
அந்நியனை அடித்து விரட்டி ஓடவைத்தவன் காங்கேசனிலே
அந்நியனின் குண்டு மறைந்திருந்து தாக்கியதுவே உன் நெஞ்சினிலே
நினைவினிலே நேர்த்தி வைத்து பிறந்த மகாராஜனே
தமிழீழம் மறந்திடுமோ உன் வீரம் மகாராஜனே
மறவர் குல மாணிக்கமே மகாராஜனே
நித்தியவேட்கை மண்ணைக் கொண்டவனே எங்கள் மகாராஜனே
நித்திய திலகமாக நிலைத்தேசனே மகாராஜனே
அன்னை தந்தை கண்ணீரோ மகாராஜாவே
ஆறாத்துயரில் மூழ்கிறோமே மகாராஜாவே
தங்கை, தம்பி கண்ணீரே மகாராஜாவே
தவியாய்த் தவிக்கிதடா மகாராஜாவே
உன் ஆத்மா சாந்திக்கு மகாராஜாவே
ஆண்டவனை வேண்டுகிறோம் மகாராஜாவே.

உன்பிரிவால் வாடும்
வெற்றிலைக்கேணி, அப்பா, அம்மா, தம்பி, தங்கை,
முள்ளியான். உறவினர்.

(R/959)

## சிந்தனைக்கு

''குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றிலெழுந்தது பார்; குடியரசென்
றுலகறியக் கூறிவிட்டார்;
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போ
தடிமையில்லை அறிக!''

— சுப்பிரமணிய பாரதியார்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 25-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 3206
த.பெ.எண் 05

# முற்றுப்பெறும் ஒரு முன்னுதாரணம்

சுதந்திரமும், சுயநிர்ணய உரிமையும் மறுக்கப்பட்ட பல தேசிய இனங்கள் இன்று உலகின் பல பகுதிகளிலும் தமது உரிமைக்காகப் போராடத் தொடங்கியுள்ளன. சமஷ்டி அமைப்பு, சோசலிசம் என்ற ரீதியில் உரிமைகள் மறுக்கப்பட்ட இந்தத் தேசிய இனங்களும் இன்று தமது எதிர்ப்பை வெளிப்படையாகத் தெரிவிக்கத் தொடங்கி விட்டன.

இந்தியா, சோவியத்ரஷ்யா, சீனா போன்ற பெரிய நிலப்பரப்பையும், பெரியளவிலான சனத் தொகையையும் கொண்டுள்ள இந்த நாடுகளில் வாழும் பல இன, மொழி, மத மக்கள் இன்று தமது உரிமைக்காகப் பலமான போராட்டங்களைத் தொடுத்துள்ளனர். இதில், இந்தியா சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளில் போராட்டங்கள் வெளிப்படையாக வெளிக் கிளம்பியுள்ளன. சீனாவைப் பொறுத்து இரும்புக்கரம் கொண்டு திரைமறைவில் அது நசுக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

1918 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் மேற் கொள்ளப்பட்ட புரட்சியும் அதைத் தொடர்ந்து வந்த எழுபது ஆண்டு காலமும் சோவியத் ரஷ்யாவில் தேசிய இனப்பிரச்சினைகள் முற்றாகத் தீர்க்கப்பட்டு விட்டன என்ற மாயையினையே உலகில் தோற்றுவித்து வந்தது.

தேசிய இனப்பிரச்சினை தீர்விற்கு சோவியத் வழிமுறையே சிறந்தது எனவும், இந்தப் பிரச்சினைத் தீர்விற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு எனவும் கூறப் பட்டது. ஆனால் இன்று சோவியத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை இவற்றையெல்லாம் மாற்றியமைத்துள்ளதோடு தேசிய இனப்பிரச்சினைகள் இன்றும் முனைப்பான பிரச்சினைகளாக சோவியத்தின் ஐக்கியத்திற்கே சவால் விடுவதாகவும் உள்ளன.

இந்த நிலையில், கடந்த எழுபது வருட காலத்தில் சோவியத் ரஷ்யாவில் திரைமறைவில் நடந்தது என்ன? தேசிய இனங்கள் ஆயுத ரீதியில் அடக்கி ஒடுக்கப்பட்டனவா?

இந்தியாவிலும் இன்று பரவலாகத் தேசிய இனப் போராட்டங்களும், சாதி மதப் போராட்டங்களும், இடம் பெற்று வருகின்றன. சோவியத் ரஷ்யாவுடன் ஒப்பிடும் போது இந்தியாவில் இந்தப் பிரச்சினை எவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தப் போவதில்லை. ஏனெனில், இந்தியா சுதந்திரம் அடைந்ததில் இருந்தே இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருந்ததோடு, பிரச்சினைகள் வெளிப்படையாகத் தெரிய வந்துகொண்டிருந்தன. மேலும், இந்திய சமஷ்டி அமைப்பில், மாநிலங்களுக்குரிய அதிகாரங்கள் மிகவும் குறைவாக வழங்கப்பட்டுள்ளமை வெளிப்படையாக காணக்கூடியதாக இருந்ததோடு, ஆட்சியாளர்கள் அதிகார துஷ்பிரயோகத்தைத் தொடர்ச்சியாகச் செய்து வந்தமை யாவரும் அறிந்த விடயமாக இருந்தது.

அதேவேளை சீனாவில், கடந்த காலத்தில் சோவியத்...

# புலிகள் மீது வீண் பழி சுமத்தும் கட்சித் தலைவர்கள் மீது கண்டனம்

## சென்னையில் அனைத்துக்கட்சிகள் மட்டத்தில்தீர்மானம்

(சென்னை)

சென்னையில் கடந்த வியாழக்கிழமை 20ஆம் திகதி நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டம் தமிழ்த்தேசிய இயக்கத்தின் தலைவர் ப. நெடுமாறன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் 53 கட்சிகள் இடம்பெற்றன. தமிழ் நாட்டில் மருத்துவ சிகிச்சைக்காக வந்துள்ள போராளிகளை கைது செய்வது தொடர்பாகவும், பரவலாக போராளிகள் கைது செய்யப்படுவது குறித்தும் மத்திய மாநில அரசாங்கங்களை கண்டித்து சில கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் தமிழ் நாட்டில் சில அரசியல் கட்சித்தலைவர்களும், சில பத்திரிகைகளும் தமிழீழ விடுதலைப்புலிகள்மீது பொய்யான பிரச்சாரங்களையும், அவதூறுகளையும் சுமத்தி வருகின்றன என்றும் அதனை வன்மையாக கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்திய அரசியலிலோ, தமிழ் நாட்டின் அரசியலிலோ ஒருபோதும் தலையிடுவது இல்லை என்பதை தமது உறுதியான கொள்கையாக விடுதலைப்புலிகள் கடைப்பிடித்து வருகிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் இதனை பலமுறை வெளிப் படையாகவே தெரிவித்திருக்கிறார்.

தமிழீழத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய அரசும், இந்திய மக்களும், இந்திய அரசியல் கட்சிகளும், தமிழ்நாடு அரசும், தமிழக மக்களும், தமிழக அரசியல் கட்சிகளும் தார்மீக ஆதரவை தரவேண்டும் என அவர் பலமுறை பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவற்றையெல்லாம் அடியோடு மறைத்தும், திரித்தும் கூறி தங்களது அரசியல் ஆதாயத்திற்காகவும் தங்களுக்குள்ள அரசியல் போட்டா போட்டி அரசியலுக்காகவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முயல்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தங்களது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் இல்லா...

...உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் எவ்வித நியாயமான காரணமுமின்றி காவல்துறையின் தொல்லைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாக்கப் பட்டு வருகின்றனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகளை வாடகைக்கு விட்ட வீட்டு உரிமையாளர்களும் காவல் துறையின் மிரட்டுதல்களுக்கு ஆளாகி வருகின்றனர். இது சர்வதேச நெறிமுறைகளுக்கே முரணானது. அமைப்புக்கள் நடத்தும் உரிமை ஆகியவற்றின் மீது தொடுக்கப்பட்ட தாக்குகளாக இந்த நடவடிக்கைகள் அமைந்துள்ளன. அப்பட்டமான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை இந்தக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

ஈவிரக்கமற்ற படுகொலைகள் செய்வதன் மூலம் இலங்கையில் உள்ள தமிழர்களை கொல்ல சிறிலங்கா அரசாங்கம் தனது முப்படைகளையும் ஏவி விட்டுள்ளது. இதன் விளைவாகவும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலாலும் நாள்தோறும் ஏராளமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். தமிழர் வாழும் பிரதேசம் பெரும் சேதம் அடைந்து வருகின்றது. இந்தக் கொலை வெறித் தாக்குதலை நிறுத்துமாறு சிறிலங்கா சிங்கள அரசை எச்சரிப்பதோடு உலக அரங்கங்களில் இந்தப் பிரச்சினையை எழுப்ப முன்வருமாறு இந்திய அரசை இந்தக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர் பகுதியில் உணவு, மற்றும் இன்றியமையாத பண்டங்கள், மருந்துகள் ஆகியவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக ஏராளமான தமிழர்கள் பட்டினியாலும் மருத்துவ வசதியின்மையாலும் மடிந்து வருகின்றனர். எனவே தமிழர் பகுதிகளுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பி வைக்குமாறு இந்திய அரசை இந்தக் கூட்டம் வேண்டிக் கொள்கிறது.

மனிதாபிமான உணர்வோடு இந்தக் கடமையை மேற்கொள்ளுமாறு இந்திய அரசை வற்புறுத்தி செயற்பட வைப்பது தமிழக அரசின் தலையாய பொறுப்பாகும். இந்தப் பொறுப்பினை தட்டிக் கழிக்காமல் நிறைவேற்ற முன்வருமாறு தமிழக அரசை இந்தக் கூட்டம் வலியுறுத்துகிறது.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையிலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தமிழக மக்களின் ஆதரவையும், உதவியையும் தெரிவிக்கும் வகையிலும் 1991 ஜனவரி மாதம் முழுவதும் தமிழீழ விடுதலைப் போர் ஆதரவு மாதமாக கடைப்பிடிக்குமாறும், இந்த மாதம் முழுவதிலும் தமிழகம் எங்கும் பொதுக்கூட்டம் கருத்தரங்குகள் கவியரங்குகள் போன்றவற்றை நடத்தி தமிழர்களை திரட்ட வேண்டும் என்றும், தமிழீழ மக்களுக்கு அனுப்புவதற்காக மருந்துகளை திரட்டுவது என்றும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அரசியல் கட்சிகளும் தமிழர் அமைப்புக்களும் முடிவு செய்தன.

### கடந்த சனியன்று ஷெல் வீச்சு

# பலாலியிலிருந்து குருநகருக்கு; 2பேர் காயம்; கட்டடங்கள்சேதம்

(குருநகர்)

கடந்த சனியன்று இரவு பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட ஆட்டிலறிஷெல்கள் குருநகரில் பரவலாக விழ்ந்து வெடித்தன.

பாங்ஷால் வீதியில் சின்னக் கடைப் பகுதியில் பல்சிகிச்சை நிலையம் ஒன்றும், 4 ஆம் குறுக்கு வீதியில் எம்.ரி. அலெக்சாண்டர், ராஜேந்திரா வீதியில் அந்தோனிப்பிள்ளை, செட்டி, சின்னத்துரை, யோகராசா...

...இன், மொழி, மத மக்கள் இன்று தமது உரிமைக்காகப் பலமான போராட்டங்களைத் தொடுத்துள்ளனர். இதில், இந்தியா சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளில் போராட்டங்கள் வெளிப்படையாக வெளிக் கிளம்பியுள்ளன. சீனாவைப் பொறுத்து இரும்புக்கரம் கொண்டு திரைமறைவில் அது நசுக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

1918 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் மேற்கொள்ளப்பட்ட புரட்சியும் அதைத் தொடர்ந்து வந்த எழுபது ஆண்டு காலமும் சோவியத் ரஷ்யாவில் தேசிய இனப் பிரச்சினைகள் முற்றாகத் தீர்க்கப்பட்டு விட்டன என்ற மாயையினையே உலகில் தோற்றுவித்து வந்தது.

தேசிய இனப்பிரச்சினை தீர்விற்கு சோவியத் வழிமுறையே சிறந்தது எனவும், இந்தப் பிரச்சினைத் தீர்விற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு எனவும் கூறப்பட்டது. ஆனால் இன்று சோவியத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை இவற்றையெல்லாம் மாற்றியமைத்துள்ளதோடு தேசிய இனப்பிரச்சினைகள் இன்றும் முனைப்பான பிரச்சினைகளாக சோவியத்தின் ஐக்கியத்திற்கே சவால் விடுவதாகவும் உள்ளன.

இந்த நிலையில், கடந்த எழுபது வருட காலத்தில் சோவியத் ரஷ்யாவில் திரைமறைவில் நடந்தது என்ன? தேசிய இனங்கள் ஆயுத ரீதியில் அடக்கி ஒடுக்கப்பட்டனவா?

இந்தியாவிலும் இன்று பரவலாகத் தேசிய இனப் போராட்டங்களும், சாதி மதப் போராட்டங்களும், இடம் பெற்று வருகின்றன. சோவியத் ரஷ்யாவுடன் ஒப்பிடும் போது இந்தியாவில் இந்தப் பிரச்சினை எவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தப் போவதில்லை. ஏனெனில், இந்தியா சுதந்திரம் அடைந்ததில் இருந்தே இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருந்ததோடு, பிரச்சினைகள் வெளிப்படையாகத் தெரிய வந்துகொண்டிருந்தன. மேலும், இந்திய சமஷ்டி அமைப்பில், மாநிலங்களுக்குரிய அதிகாரங்கள் மிகவும் குறைவாக வழங்கப்பட்டுள்ளமை வெளிப்படையாக காணக்கூடியதாக இருந்ததோடு, ஆட்சியாளர்கள் அதிகார துஷ்பிரயோகத்தைத் தொடர்ச்சியாகச் செய்து வந்ததை சகலரும் அறிந்த விடயமாக இருந்தது.

அதேவேளை சீனாவில், கடந்த காலத்தில் சோவியத் ரஷ்யாவில் திரைமறைவில் நடத்தப்பட்டது போன்ற நிலையே உள்ளதால் உண்மை விபரங்கள் வெளியில் தெரிவருவதில்லை. ஆனால் திபெத்திலும் தியனென்மன் சதுக்கத்திலும் சீனா நடந்து கொண்டதில் இருந்து சீனாவில் தேசிய இனங்களின் பிரச்சினைகள் இரும்புக்கரங்களைக் கொண்டு நசுக்கப்பட்டு வருகின்றனவா என்று சந்தேகப்படத் தேவையில்லை.

அதேவேளை இந்த தேசிய இனப்பிரச்சினைகளை ஆட்சியாளர்கள் வெளிநாட்டாரின் ஊடுருவல், அந்நிய நாட்டின் தலையீடு என மழுங்கடிக்கப் பார்ப்பதோடு, அவர்களை பெரும்பான்மை இனத்தின் விரோதிகள், பயங்கரவாதிகள் என்று அவப்பெயர்களைத் தோற்றுவித்து நாட்டில் வன்முறை பெருக வழிவகைகளைத் தோற்றுவிக்கின்றனர். இதை நிரூபிக்குமாப் போல் சோவியத்தில் இன்று முனைப்புப் பெற்றுள்ள தேசிய இனங்களின் பிரச்சினையையும், போராட்டத்தையும் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் தூண்டுதல் என சோவியத் உளவு ஸ்தாபனமான கே. ஜி. பியின் தலைவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையில் தமிழ் தேசிய இனப்போராட்டத்தை இந்தியாவின் தலையீடு, விரிவாக்கத்திற்கான வழி எனக் காட்டமுனைந்தே சிங்கள அரசியல்வாதிகள் ஆதாயம் தேடினர். அதேவேளை சிங்கள மக்களை தமிழருக்கு எதிராகவும் பயன்படுத்தினர். ஆனால் இந்திய இராணுவத்தை சிறிலங்கா ஆட்சியாளர்கள் சிங்கள மக்களினதும், தமிழ் மக்களினதும் அபிப்பிராயங்களை மீறி வரவழைத்ததும் தமிழ் மக்கள் அதற்கெதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய போதும்தான், தமிழர்தேசிய போராட்டம் அவர்கள் அனுபவித்த துன்பத்தின் வெளிப்பாடு என்பதை சிங்கள மக்கள் உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டனர்.

இதேபோன்றே இந்தியாவாக இருந்தால் என்ன, சோவியத் ரஷ்யாவாக இருந்தால் என்ன அடக்கப்பட்ட இனம் தனது உரிமைக்காகப் போராடியே தீரும். அவர்களின் உரிமைகள் வழங்கப்பட்டால் ஒழிய அவை ஓயாது. இதனால் இலங்கைமட்டுமல்லபோராட்டங்களால் சோவியத் யூனியன் கூட பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை,

---

என்றும் அதனை வன்மையாக கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது;

இந்திய அரசியலிலோ, தமிழ் நாட்டின் அரசியலிலோ ஒருபோதும் தலையிடுவது இல்லை என்பதை தமது உறுதியான கொள்கையாக விடுதலைப்புலிகள் கடைப்பிடித்து வருகிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் இதனை பலமுறை வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்.

தமிழீழத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய அரசும், இந்திய மக்களும், இந்திய அரசியல் கட்சிகளும், தமிழ்நாடு அரசும், தமிழக மக்களும், தமிழக அரசியல் கட்சிகளும் தார்மீக ஆதரவை தரவேண்டும் என அவர் பலமுறை பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்;

இவற்றையெல்லாம் அடியோடு மறைத்தும், திரித்தும் கூறி தங்களது அரசியல் ஆதாயத்திற்காகவும் தங்களுக்குள் அரசியல் போட்டா போட்டி அரசியலுக்காகவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முயல்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தங்களது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் இல்லாவிடில் அவர்களுக்கு எதிராக போராட்டம் நடத்தவேண்டி வரும் எனவும் அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது;

சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராகப்போராடி படுகாயம் அடைந்த தமிழர்கள் தமிழகத்தை நாடி வருவது இயற்கையாகும். அவ்வாறு வருபவர்களை அரவணைத்து பாதுகாப்பது தமிழக மக்களின், தமிழக அரசின் தலையாய கடமையாகும். இந்தக் கடமையை செய்வதைக் கூட பெருங் குற்றமாக கருதி தமிழின மக்களில் சிலர் கூக்குரல் விடுவதைக் கண்டு தமிழக அரசு அஞ்சுவதோடு அத்தகையோரை எப்படியாவது திருப்திப்படுத்துவதற்கு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

காயமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளையும், அகதிகளாக வந்தோரையும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமிழ் நாடு அரசு கைது செய்வதை இந்தக் கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

சிறை வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளையும் அகதிகளையும் எந்தவித நிபந்தனையும் இன்றி உடனே விடுதலை செய்யுமாறு இந்தக் கூட்டம் வற்புறுத்துகிறது

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருக்கக் கூடிய அரசியல் கட்சிகள், தமிழர் அமைப்புக்கள் ஆகியவற்றின்...

---

...யும் ஏவி விட்டுள்ளது. இதன் விளைவாகவும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலாலும் நாள்தோறும் ஏராளமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். தமிழர் வாழும் பிரதேசம் பெரும் சேதம் அடைந்து வருகின்றது. இந்தக் கொலை வெறித் தாக்குதலை நிறுத்துமாறு சிறிலங்கா சிங்கள அரசை எச்சரிப்பதோடு உலக அரங்குகளில் இந்தப் பிரச்சினையை எழுப்ப முன்வருமாறு இந்திய அரசை இந்தக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர் பகுதியில் உணவு, மற்றும் இன்றி...

...தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தமிழக மக்களின் ஆதரவையும், உதவியையும் தெரிவிக்கும் வகையிலும் 1991 ஜனவரி மாதம் முழுவதும் தமிழீழ விடுதலைப் போர் ஆதரவு மாதமாக கடைப்பிடிக்குமாறும், இந்த மாதம் முழுவதிலும் தமிழகம் எங்கும் பொதுக்கூட்டம் கருத்தரங்குகள் கவியரங்குகள் போன்றவற்றை நடத்தி தமிழர்களை திரட்ட வேண்டும் என்றும், தமிழீழ மக்களுக்கு அனுப்புவதற்காக மருந்துகளை திரட்டுவது என்றும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அரசியல் கட்சிகளும் தமிழர் அமைப்புக்களும் முடிவு செய்தன.

---

## கடந்த சனியன்று ஷெல் வீச்சு

# பலாலியிலிருந்து குருநகருக்கு; 2பேர் காயம்; கட்டடங்கள்சேதம்

(குருநகர்)

கடந்த சனியன்று இரவு பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட ஆட்டிலறிஷெல்கள் குருநகரில் பரவலாக வீழ்ந்து வெடித்தன.

பத்துக்கும் மேற்பட்ட வீடுகள், கல்லூரி, கடை, பல் சிகிச்சை நிலையம் என்பன சேதமடைந்ததுடன், இருவர் காயங்களுக்கும் ஆளாகினர்.

றெக்கிளமேஷன் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த டோனாஸ் மேரிஸ்ரெலா (24) றெஜினோல்ட் டொனால்ட் (15) ஆகிய இருவரும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் அபயம் தேடிப்போயிருந்த வேளை அங்கே வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் காயம் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கல்லூரியும் சேதமடைந்தது.

குருநகர் லவுஸ் கார்மல் வீதி செல்லத்துரை என்பவரது வீட்டில் வீழ்ந்த ஷெல்லுக்கு வளர்ப்பு நாயொன்று பலியானது. வீடும் பலத்த சேதத்திற்குள்ளானது.

பாங்ஷால் வீதியில் சின்னக் கடைப் பகுதியில் பல்சிகிச்சை நிலையம் ஒன்றும், 4 ஆம் குறுக்கு வீதியில் எம்.ரி. அலெக்சாண்டர், ராஜேந்திரா வீதியில் அந்தோனிப்பிள்ளை, செட்டி, சின்னத்துரை, லோகராசா பாங்ஷால்வீதியில் முன்னாள் யாழ். மாநகர சபை உப மேயர் திருமதி அந்தோனியா சாமிநாதர், சிலுவைராசா, ஹென்றி (கொண்டடி) வீதியில் வைத்தியான் அந்தோனிப்பிள்ளை, இர்பானி (ஐஸ்பிளான்ட்) வீதியில் ராணி ஆகியோரது வீடுகளும் சேதமடைந்துள்ளன;

மேலும் சில ஷெல்கள் குடிமனைகளைத் தாண்டிக் கடலில் வீழ்ந்து வெடித்தன; அரைமணி, கால்மணி நேரத்திற்கு ஒருதடவை ஏவப்பட்ட ஷெல்களின் பீதியால் குருநகர் மக்கள் கொட்டும் மழையிலும்கூட குழந்தைகளையும் வயோதிபர்களையும் கூட்டிக் கொண்டு இரவோடிரவாகப் பாதுகாப்பான இடங்களைத் தேடிஓடியதைக் காணக்கூடியதாக இருந்தது; (21)

# வட-இலங்கை சங்கீதசபை பரீட்சைகள் ஏப்பிரல் 17 இல்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீதசபையின் மிருதங்கம், சங்கீதம், பண்ணிசை, நடனம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் 1991 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகும்;

மேற்படி பரீட்சைகளுக்குரிய விண்ணப்பங்கள் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி 1 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை சங்கீத சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்; (ஈ)

# இராம ஜென்ம பூமி - பாபர் மசூதி ஆவணங்கள் அரசிடம் ஒப்படைப்பு

(டில்லி)

இராம ஜென்ம பூமி-பாபர் மசூதி தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்க்க விஸ்வ ஹிந்து பரிஷத்தும் பாபர் மசூதி நிர்வாகக் குழுவும் தமது ஆவணங்களை இந்திய மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளன.

இதற்கு முன்னராக இந்திய உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாய் இரண்டு கட்சியினரிடமும் அவர்களுக்குரிய ஆவணங்களை ஒப்படைக்குமாறும், அதன்படி தீர்வு எடுக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட விஸ்வ ஹிந்து பரிஷத்தும், பாபர் மசூதி நிர்வாகக் குழுவினரும் தமது ஆவணங்களை மத்திய உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாயிடம் ஒப்படைத்துள்ளனர்.

விஸ்வ ஹிந்து தேசப்படம், புகைப்படம் மற்றும் கல்வெட்டுக்கள் அடங்கிய நூறு ஆவணங்களையும் பாபர் மசூதி நிர்வாகக் குழுவினர் புகைப்படங்கள் அடங்கிய 80 ஆவணங்களையும் ஒப்படைத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஜனவரி 10 ஆம் திகதி 3ஆம் சுற்றுப் பேச்சுக்கள் மத்திய அரசாங்கத்திற்கும், இரு பிரிவினருக்கும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கோர்பசேவின் ஆலோசனைக்கு மக்கள்மன்றம் அமோக ஆதரவு

(மொஸ்கோ)

இரு விடயங்கள் தொடர்பாக மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தும் சோவியத் தலைவர் கொர்பசேவ் திட்டத்திற்கு சோவியத்பிரதிநிதிகள்மன்றம் அமோக ஆதரவளித்துள்ளது.

இக் கருத்துக் கணிப்பில் தொடர்ந்தும் சோவியத் குடியரசுகள் பதினைந்தும் இணைந்திருப்பது பற்றியும், நிலங்களைத் தனியார் உடைமை ஆக்குவது பற்றியும் மக்கள் அபிப்பிராயம் பெறப்படும்.

அதேவேளை இக்கருத்துக் கணிப்பு எப்பொழுது நடைபெறும் என்று அறிவிக்கப்படவில்லை.

# எம். ஜி. ஆர். நினைவு நாளில் பொலிஸார் தடியடிப் பிரயோகம்

(சென்னை)

தமிழக முன்னாள் முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன், ஈ. வெ. ரா. பெரியார் ஆகியோரின் நினைவு தினம் நேற்றுத் தமிழகம் எங்கும் கொண்டாடப்பட்டது.

சென்னையில் அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவி செல்வி ஜெயலலிதாவும் ஏனைய தலைவர்களும் தொண்டர்கள் சகிதம் எம். ஜி. ஆரின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். அச்சமயம் பாழ்ப் போராளி ஒருவர் கைத்துப்பாக்கியுடன் நிற்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து கூடி நின்றவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது. பொலிஸார் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இச்சம்பவம் குறித்துச் சென்னை காவல்படை வட்டாரம் வெளியிட்ட தகவல் வருமாறு;-

துப்பாக்கியும் கையுமாக நின்றார் என்று சந்தேகப்பட்டவர் கையில் படம் எடுக்க என கமெராவை வைத்திருந்தார். இவர் தமிழகத்தைச் சேர்ந்த இந்தியப் பிரஜை என்றும், அவர் வசம் இலங்கைக் கடவுச்சீட்டு இருந்ததாம் என்றும் கூறப்படுகின்றது.

## மாங்குளம் ஒளிப்பதிவு நாடா

(நமது நிருபர்)

மாங்குளம் இராணுவமுகாம் தாக்குதல் தொடர்பாக 'நிதர்சனம்' நிறுவனத்தால் ஒளி, ஒலி பதிவு செய்யப்பட்ட 'ஒளிப்பதிவு நாடா' பலஇடங்களிலும் தற்போது காண்பிக்கப்பட்டுவருகிறது.

## உதவி அரசாங்க அதிபர்பிரிவுகள் அதிகரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்காகத் தற்போதுள்ள உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளில் சிலவற்றைச் சனத்தொகை, புவியியல் காரணிகள் என்பவற்றை அடிப்படையாக வைத்து இரண்டாகப் பிரிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இந்த வரிசையில் கொடிகாமம், புங்குடுதீவு, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் ஆகியபிரிவுகள்தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இதுபற்றி பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டு இறுதி முடிவு பெறப்பட்டதும் மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் விரிவுபடுத்தப்படவிருக்கின்றன. (க)

# செலவீன அறிவிப்புக்கு எதுவித பலனும் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச்சங்கங்களுக்கு நிவாரணப் பொருள்கள் விநியோகம் செய்யத் தேவையாகும் செலவீனங்கள் குறித்து விபரப்பட்டியல் சேர்த்து அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு ஏற்கனவே இரண்டு மாதங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்டுவிட்டபோதிலும் இதுவரை எதுவித முன்னேற்றமும் தெரியவில்லையென கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தற்போதுபடும் அவஸ்தை நிலைகுறித்துக் கவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இந்நிலை குறித்து குறிப்பிடுகையில் அத்தியாவசிய சேவைகள் நாயகம் தாமாக வேண்டிக்கொண்டதற்கு இணங்கவே இந்தப்பட்டியலைத் தாம் தயாரித்து அனுப்பி வைத்ததாகவும், நிவாரணப் பொருள்கள் மட்டும் தற்போது கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படுவதால் அதற்கு பணப்புழக்கம் எதுவும் இல்லாதநிலை இருந்து வருகிறது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்குப் பொருள்களை ஏற்றிச் செல்ல இரண்டாயிரம் ரூபா செலவாகிறது என்றும் அப்படியாயின் நிவாரணத்திற்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதானால் இரண்டு லட்சம் ரூபா செலவாகும். இந்தப்பணத்தை எங்கிருந்து பெற்றுக் கொள்வது என்று ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களும் கேள்வி எழுப்புவதாக அவர் கூறினார்.

## சேவைக்கால கருத்தரங்கு

பண்டத்தரிப்பு கோட்டவிஞ்ஞான, கணித ஆசிரியர்களுக்கான சேவைக்கால கருத்தரங்கு நாளை புதன்கிழமை 26-12-90 காலை 9 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கோட்டத்தில் விஞ்ஞானம் கற்பிக்கும் சகல ஆசிரிய ஆசிரியைகளையும் தவறாது பங்குகொள்ளுமாறு கோட்டக்கல்வி அதிகாரி திரு. க. மகேசன் கேட்டுக் கொள்கின்றார். (த)

## சேதமான 3 படகுகளுக்கு நஷ்டஈடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து அத்தியாவசியப் பொருள்களை இறக்கும் சமயம் கடல் கொந்தளிப்புக் காரணமாக சேதத்திற்குள்ளான மூன்று சிறிய படகுகளின் உரிமையாளர்களுக்கு யாழ். செயலக அத்தியாவசிய சேவைகள் பகுதியினால் நஷ்டஈடு வழங்கப்பட்டது. (க)

காவல் அரண்

பிறவு இராணுவ முகாமில் இருந்து 200 யார் தொலைவில் சிறிலங்கா இராணுவத்தினர் காவலரண் அமைத்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மாலை ஆறு மணியில் இருந்து இரவு ஒரு மணிவரை இராணுவ முகாமைச் சுற்றி உள்ள பகுதியினை நோக்கித் தொடர்ச்சியான ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலால் சேதம் எதுவுமேற்படவில்லை. (35, மூ)

கிழக்கில்

பட்டபோதே இச் சம்பவம் நடந்ததாகவும் அச் செய்தி மேலும் தெரிவித்தது.

அதேவேளை நேற்று திருக்கோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற கவசக இராணுவ வண்டி மீதான கண்ணிவெடி தாக்குதலில் பத்தொன்பது இராணுவம் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், ஐந்து இராணுவத்தினர் படுகாயமுற்றதாகவும் வாகனம் சிதறியதாகவும் இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு வட்டாரங்கள் விடுதலைப் புலிகளின் இந்தத் தாக்குதல் குறித்து மேலும் தெரிவிக்கையில், நேற்றுக் காலை எட்டு முப்பது மணியளவில் பாரிய கவச வண்டி ஒன்றில் மியத்தவெல ?…னும் …திற்கும் கொறவப்பொத்தானைக்கும் இடையில் பயணம் செய்து கொண்டிரு…

## அஜித்தாவிற்கு அஞ்சலி

(சாவகச்சேரி)

கட்டுவன் பகுதியில் வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த கப்டன் அஜித்தா (சுகுணராணி கந்தையா பெரிய அரசடி, சாவகச்சேரி) வின்புகழுடல் நேற்றுநண்பகல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. பெருந்தொகையான மாணவர்களும், பொதுமக்களும் கப்டன் அஜித்தாவிற்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். (35) (மூ)

## துயர் துடைப்பு

தென் தமிழீழ மக்களின் துயர் துடைப்புநிதிக்கு பலாலி பயிற்சி ஆசிரியர் ஒன்றியம், பயிற்சிக்கலாசாலை அதிபர், விரிவுரையாளர்கள் ஊழியர்கள், பயிற்சி ஆசிரியர் ஆகியோரிடமிருந்து 21800/- ரூபா நிதியைத் திரட்டி வழங்கியுள்ளது.

தமிழ்மக்களையும்

ளாக இன்று தங்களை உருவாக்கியுள்ளனர்.

இவ்வாறு நேற்றுக்காலை கனோகம, சந்தைப் பகுதியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த போராளி…

இராணுவ

நாடுகள் அமைப்பு சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதைச் சுட்டிக்காட்டியது தொடர்பான இத்தாலியத் தினசரி ஒன்றில் பிரசுரமான விமர்சன செய்தியைக் …

தினசரி

யில் தினமும் 17பேர் சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டுவரப்படுகின்றனர்.

இவர்கள் கொழும்பிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டபோதிலும், சரியான முறையில் கவனிக்கப்படுவது இல்லையென்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரின் மருமகன் பெண்டி ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இராணுவமும் மீது…

குப்பிளானில்

மணியனில் குப்பிளானில் இருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் புலிக…

டப்பட்டது.

சென்னையில் அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவி செல்வி ஜெயலலிதாவும் ஏனைய தலைவர்களும் தொண்டர்கள் சகிதம் எம். ஜி. ஆர். சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். அச்சமயம் ஈழப் போராளி ஒருவர் கைத்துப்பாக்கியுடன் நிற்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்

## சேவைக்கால கருத்தரங்கு

பண்டத்தரிப்பு கோட்ட விஞ்ஞான, கணித ஆசிரியர்களுக்கான சேவைக்கால கருத்தரங்கு நாளை புதன்கிழமை 26-12-90 காலை 9 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கோட்டத்தில் விஞ்ஞானம் கற்பிக்கும் சகல ஆசிரிய ஆசிரியைகளையும் தவறாது பங்குகொள்ளுமாறு கோட்டக்கல்வி அதிகாரி திரு. க. மகேசன் கேட்டுக் கொள்கின்றார். (2)

---

### தமிழ்மக்களையும்

ளாக இன்று தங்களை உரமாக்கியுள்ளனர்.

இவ்வாறு நேற்றுக்காலை சுன்னாகம் சந்தைப் பகுதியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தி உரையாற்றும்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் யோகி தெரிவித்தார்.

பெருந்திரளான மக்கள் கூடியிருந்து, கட்டுவன் மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். இதில் ஆஞ்சநேயர் தயாக தீபத்தை ஏற்றிவைத்தார். தினேஸ். பரா. ராஜன், பேபி சுப்பிரமணியம் ஆகிய முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். காலை 10-30 மணியளவில் பாண்ட் இசையுடன் போராளிகளின் பூவுடல்கள் சுன்னாகத்திலிருந்து மருதனாமடம் வரை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டன. பின்னர் வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டு போராளிகளின் வீடுகளில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. சுன்னாகம் பகுதியில் நேற்று போராளிகளுக்கு அஞ்சலிசெலுத்துவதற்க வீதிகள் தோறும் மஞ்சள், சிவப்பு நிற கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

இதன் ஓர் பகுதியில் இறந்த இராணுவத்தின் உடல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. மோதலில் புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்களும் வைக்கப்பட்டிருந்தன.

டாரம்வெளியிட்ட தகவல் வருமாறு:-

துப்பாக்கியும்கையுமாக நிற்கிறார் என்று சந்தேகப்பட்டவர் கையில் படம் எடுக்க என கமெராவை வைத்திருந்தார். இவர் தமிழகத்தைச் சேர்ந்த இந்தியப் பிரஜை என்றும், அவர் வசம் இலங்கைக் கடவுச்சீட்டு இருந்ததாம் என்றும் கூறப்படுகின்றது.

## சேதமான 3 படகுகளுக்கு நஷ்டஈடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து அத்தியாவசியப் பொருள்களை இறக்கும் சமயம் கடல் கொந்தளிப்புக் காரணமாக சேதத்திற்குள்ளான மூன்று சிறிய படகுகளின் உரிமையாளர்களுக்கு யாழ். செயலக அத்தியாவசிய சேவைகள் பகுதியினால் நஷ்டஈடு வழங்கப்பட்டது. (க)

---

### இராணுவ

நாடுகள் அமைப்பு சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதைச் சுட்டிக்காட்டியது தொடர்பாக இந்தியத் தினசரி ஒன்றில் பிரசுரமாகியிருந்த செய்தியைச் சிறிமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் படித்துக் காண்பித்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தில் ஆத்திரம் கொண்டிருப்பதாகவும், அதனால் தான் இத்தகைய செய்திகளை வெளியிடுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

---

### தமிழீழ மீட்பு

ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தமது பங்களிப்பைச் செலுத்துவதற்கு வசதியாக இந்த மாதம் 27ஆம், 28 ஆம் திகதிகளில் மீட்பு நிதியைத் திரட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பங்களிக்கவிரும்பும் நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இந்த மாதம் 27 ஆம் திகதியும், உடுவில், சங்கானை, தெல்லிப்பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இந்த மாதம் 28 ஆம் திகதியும் காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை கோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச்செயலகத்துடன்தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (க)

கப்படுவருகிறது.

---

### காவல் அரண்

பிறவு இராணுவ முகாமில் இருந்து 200 யார் தொலைவில சிறிலங்கா இராணுவத்தினர் காவலரண் அமைத்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மாலை ஆறு மணியில் இருந்து இரவு ஒரு மணிவரை இராணுவ முகாமைச் சுற்றி உள்ள பகுதியை நோக்கி தொடர்ச்சியான ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலால் சேதம் எதுவுமேற்படவில்லை. (35, மூ)

---

### தினசரி

ல் தினமும் 17பேர் சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டுவரப்படுகின்றனர்.

இவர்கள் கொழும்பிலமருத்துவமனைகளில அனுமதிக்கப்பட்டபோதிலும், சரியான முறையில் கவனிக்கப்படுவது இல்லையென்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரின் மருமகன் பெனிடிக்ட் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

---

### இராணுவம் மீது

ஐந்துமைல் தூரத்தில் உள்ள மநாச்சியாகம இராணுவ முகாமிற்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீண்டும் மருதமடு இராணுவ முகாமிற்கு ஒரு ஜீப், ஒரு ட்றக், ஒருபவல் ஆகிய வாகனங்களில் திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது மருதமடு முகாமில் இருந்து 500 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல மேற்கொண்டனர். வீரமரணமடைந்த மேஜர் பிறின்ஸின் 31ஆவது நினைவுநாளில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

முன்னால் சென்ற ஜீப்பைத் தவிர்த்து பின்னால், வந்த ட்றக் வண்டிமீது புலிகள் தாக்குதல்மேற்கொண்டதில் ட்றக் வண்டி முற்றாகச் சேதமடைந்தது. அதன் பின்வந்த பவல் வாகனமும் சேதமடைந்தது. இந்தச் சம்பவத்தில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இராணுவத்தினரிடமிருந்து ரீ - 56 1 ரகத் துப்பாக்கி - 1, ரீ - 56 2 ரகத் துப்பாக்கி - 1, ரீ - 56 பட்டொடல் - 2, ஏ. கே. மகசின் - 1, ஜே. ஆர். கிரனைட் - 3, ஐ எம். ரவைகள் - 328, கோலசர் - 3 ஆகிய ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் லெப். சசி (சேந்தன்குளம், மாந்தை) என்பவர் வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (மூ)

த்துள்ளார்.

அவர் மேலும் இந்நிலை குறித்து குறிப்பிடுகையில் அத்தியாவசிய சேவைகள் நாயகம் தாமாக வேண்டிக்கொண்டதற்கு இணங்கவே இந்தப்பட்டியலைத் தாம் தயாரித்து அனுப்பி வைத்ததாகவும், நிவாரணப் பொருள்கள் மட்டும் தற்போது கூட்டுறவுச் சங்கங்க

---

### இழககில்

பட்டபோதே இச் சம்பவம் நடந்ததாகவும் அச் செய்தி மேலும் தெரிவித்தது.

அதேவேளை நேற்று திருக்கோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற கவச இராணுவ வண்டி மீதான கண்ணிவெடி தாக்குதலில் பத்தொன்பது இராணுவம் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், ஐந்து இராணுவத்தினர் படுகாயமுற்றதாகவும் வாகனம் சிதறியதாகவும் இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு வட்டாரங்கள் விடுதலைப் புலிகளின் இந்தத் தாக்குதல் குறித்து மேலும் தெரிவிக்கையில், நேற்றுக் காலை எட்டு முப்பது மணியளவில் பாரிய கவச வண்டி ஒன்றில், மிபத்தவெவ எனும் இடத்திற்கும் கோறவெபொத்தானைக்கும் இடையில் பயணம் செய்து கொண்டிருந்த பாதுகாப்புப்படை அணி ஒன்று மனனகட்டிபுர எனும் இடத்தை அடைந்தபோது விடுதலைப் புலிகள் கண்ணிவெடி கொண்டு இந்த வாகனத்தை சிதறடித்து விட்டதாகவும் கூறியது. அத்துடன் இந்த வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்த படையினர் அனைவரும் கண்ணிவெடிக்குள் சிக்கியதால் பத்தொன்பது பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுவிட்டதாகவும். இவர்களில் இருவர் அதிகாரிகள் எனவும், பலத்த காயமடைந்த நிலையில் ஐந்து இராணுவத்தினர் இருப்பதாகவும் கூறியது. மேலும் இத்தாக்குதலில் இராணுவத்தினருடன் வந்த வேறு நான்கு பேரும் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தது.

பொலிஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இத்தாக்குதல்பற்றி செய்தி வெளியிட்ட பீ.பீ.ஸி. கண்ணிவெடி தூரத்தில் இருந்து வெடிக்கப்பட்டதாகவும் வெடிக்கப்பட்ட இடத்தில் ஒரு யானையைப் போட்டு புதைக்கக்கூடிய குழி ஒன்று ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டது. மேலும், இச்சம்பவம் நடைபெற்றபோது கடும் மழை பெய்து கொண்டிருந்ததாகவும் இதனால், கண்ணிவெடித்த குழியில் நீர் நிறைந்துவிட்டதாகவும் தெரிவித்தது. பின்னர், நீர் இறைக்கப்பட்ட பின்னரே சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவித்தது.

## அஞ்சலி

(சாவகச்சேரி)

கட்டுவன் பகுதியில் வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த கப்டன் அஜித்கா (குணராணி கந்தையா பெரிய அரசடி, சாவகச்சேரி) வின் புகழுடல் நேற்றுநண்பகல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. பெருந்தொகையான மாணவர்களும், பொதுமக்களும் கப்டன் அஜித்காவிற்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். (35) (மூ)

---

## துயர் துடைப்பு

தென்தமிழீழ மக்களின் துயர் துடைப்பு நிதிக்கு பலாலி பயிற்சி ஆசிரியர் ஒன்றியம், பயிற்சிக்கலாசாலை அதிபர், விரிவுரையாளர்கள் ஊழியர்கள், பயிற்சி ஆசிரியர் ஆகியோரிடமிருந்து 21800/- ரூபா நிதியைத் திரட்டி வழங்கி உள்ளது.

---

### குப்பிளானில்

மணியனில் குப்பிளானில் இருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இராணுவம் இழப்புக்களுடன் பின்வாங்கியுள்ளது. சேதவிபரங்கள் தெரியவில்லை. புலிகள் தரப்பில் பெண் போராளி ஜீவா (சிவபாதம், மஞ்சுளா செட்டிகுளம் வவுனியா) வீரமரணமடைந்துள்ளார் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர் (மூ)

---

### மாவிட்டபுரத்தில்

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் மாவிட்டபுரம் மின் இராணுவ முகாமில் இருந்து விடுதலைப் புலிகளின் காவலரண்களை நோக்கி சிறிலங்க இராணுவத்தினர் முன்னேற முற்பட்டபோது விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதலால் பெரும் இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றனர் இராணுவத்தினரின் சேதவிபரம் தெரியவில்லை.

விடுதலைப்புலிகள் தரப்பில் லெப். ராஜன் (சிவஞானசுந்தரம் சுதநாதன் கொக்குவில் மேற்கு), 2 ஆவது லெப். அருள்நேசன் (வல்லிபுரம் பாலேந்திரன் சாசாலை வடக்கு, சாவகச்சேரி), ஜெறோம் (தர்மராசா சசிரேகன் சங்கத்தானை சாவகச்சேரி), மித்திரன் (செல்வநாதன் பெனடிக்ற்குமார் ஆனைக்கோட்டை) ஆகியோர் வீரமரணம் அடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (மூ)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.